**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 10.09.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்பட்டது.

**1. மேற்குமண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இந்த வாரம் ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மழையை ஒட்டிய பகுதிகளில் மிதமான மழையும் மற்ற பகுதிகளில் இலேசான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ-24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 14-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று தென் மேற்கு திசையிலிருந்து வீ சக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழையுடன் மணிக்கு 6-24 கிமீ வரை காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- மழை எதிர்பார்க்கப்படுவதால் நிலவும் வானிலையில் நீர்பாசனம், களையெடுத்தல், மருந்து தெளித்தல் போன்ற பயிர்மேலாண்மை நடவடிக்கைகளை ஒத்திவைக்கவும்.
- மழை எதிர்பார்க்கபடுவதால், வட கிழக்கு பருவ மழை கால விதைப்பிற்கான நிலங்களை தயார் செய்யவும்.
- மேற்கு மலைத்தொடர் அடிவாரங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் போதியவடிகால் வசதி மேற்கொள்ளவும். மேலும் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டாம்.
- மத்தியகால வயதுடைய நெல் இரகங்களான சம்பா நெல்லை எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி நாற்றாங்காலில் விதைக்கவும். நெல் விதைப்பு செய்துள்ள வயல்களில் இரவில் நீர்தேக்கி காலையில் வடிப்பதனால் மழையினால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கலாம். நேரடி நெல் வயல்களில் போதுமான மழை பெறப்பட்டவுடன் மத்தியகால வயதுடைய நெல் இரகங்களை நேரடி விதைப்பு செய்யவும். நாற்றாங்காலில் சாறு உறிஞ்சும் பூச்சி தாக்குதல் காணப்பட்டால் 5% வேப்பம் கொட்டை சாறு தெளிக்கவும்.
- சிறு தானியங்கள் மற்றும் நிலக்கடலை அறுவடையினை மழை எதிர்பார்க்கப்படுவதால் ஒத்தி வைக்கவும். ஏற்கனவே அறுவடை செய்த தானியங்களை மழையில் நனையாமல் பாதுகாக்கவும்.
- மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கொடுக்கவும்.
- பருத்தியில் செடிகளில் மழையினைப் பயன்படுத்தி களைத்து அல்லது பாடுவாசி விதைப்பு செய்து பயிர் எண்ணிக்கையினை பராமரிக்கவும்.
- பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த இமிடாகுளோபிரிட் 70% WG 375 கிராம் / ஹெக்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

- இறவை மரவள்ளி கிழங்கு நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். நடவு செய்யும் மரவள்ளிக்கிழங்கின் கரணைகள் 15 செ.மீ நீளமும் 8 முதல் 10 கணுக்கள் உள்ளனவாகவும் மேலும் தண்டின் நடுப்பகுதியில் வெட்டப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். கரணைகளை நடவு செய்வதற்கு முன்பு 1 கிராம் கார்பன்டசிம் மருந்தினை1 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நிமிடம் ஊரவைக்கவும்.
- அதிவேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதனால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். தூறல் மழையினைப் பயன்படுத்தி பழங்கள் அறுவடை செய்யப்பட்ட வாழை மரங்களை தூறுடன் வெட்டி சாய்த்து துண்டுகளாக்கி இயற்கை உரமாக்கவும். வாழையில் மண் அனைக்கும் போது வாடல் நோயை மேலான்மை செய்ய டிரைக்கோடெர்மா விரிடி ஹெக்டருக்கு 2.5 கிலோ உயிரியியல் காரணியை 250 கிலோ எருவுடன் கலந்து வேர்பகுதியில் இடவும்.
- திராட்சையில் காலையிலும் மற்றும் மாலையிலும் காற்றின் ஈரப்பதம் அதிக அளவில் காணப்படுவதால் அடிச்சாம்பல் நோய் வர வாய்ப்புள்ளது. ஆகவே 1 சத போர்டோ கலவையை தெளிக்கவும் அல்லது தாமிரம் கலந்த ஏதாவது ஒரு பூஞ்சாணக் கொல்லியை 0.25 சத அளவில் மழையில்லா நேரங்களில் தெளிக்கவும். 10 நாட்கள் இடைவெளியிட்டு மறுபடியும் ஒருமுறை தெளிக்கவும்.
- கோழி மற்றும் மாட்டுத்தீவனங்களில் மழை மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் பூஞ்சான நச்சு பாதிக்கபடாமல் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் செய்யவேண்டும்.

## 2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 10.09.2025 முதல் 14.09.2025 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 37°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 24 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- தற்போது நிலவும் வானிலையை பயன்படுத்தி நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும். நெல் நடவு செய்ய நிலத்தை தயார் செய்யும் போது ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இடவும். நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் 10 கிலோ ஜிங்சல்பேட் 15 கிலோ யூரியா 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும்.
- மழைகாலம் நூற்புழு தாக்குதலுக்கு உகந்தது என்பதால் நெல் நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- தற்போது நிலவும் வானிலையால் நெல் பயரில் கரு நாவாய் பூச்சி தாக்கம் தென்படுகிறது, இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு தையாமீத்தாக்சைம் 25 WG 40 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும்.
- தற்போது நிலவும் வானிலையால் நெல் பயரில் தண்டு துளைப்பான் தாக்கம் தென்படுகிறது, இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 SC 600 மில்லி அல்லது குளோர்பைரிபாஸ் 20 EC @ 500 மில்லி என்ற அளவில் பயன்படுத்தவும்.
- காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். ஏனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும்.

### 3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 10.09.25 முதல் 13.09.25 ஆகிய நாட்களில் மிகவும் இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34-38°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-28°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60-80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. 24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 08-20 கி.மீ வேகத்தில் வீ சக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு – தென்மேற்கு திசையில் இருந்து வீ சும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- மிகவும் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது பயிரின் தேவை மற்றும் உள்ளூர் வானிலையின் அடிபடையில் பாசனம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- மானாவாரி மற்றும் பாசனப்பயிர்களில் காற்றின் வேகம் நோய்க்கு வாய்ப்பு உள்ளதால் மருந்து தெளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- நெல்லில் தற்போது நிலவும் வானிலை இலைச்சுருட்டை ஏற்படுவதற்கு சாதகமாக உள்ளது. எனவே விவசாயிகள் அசாடிராக்டின் 0.03% 1000மிலி/எக்டர் அல்லது குளோரோரான்ட்ரினிப்ரோல் 18.5% SC @ 150 கிராம்/எக்டர். அல்லது தியாமெதோக்சம் 25% WG @ 100 கிராம்/ எக்டர் என்ற விகிதத்தில் உள்ளூர் வானிலைக்கேற்ப தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது.
- உளுந்திற்கு மழையை பயன்படுத்தி உரமிடவும். பயிர் பூக்கும் தருத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயறு ஒன்டரை எக்டருக்கு 5 கிலோ என்ற அளவில் இலைவழித் தெளிப்பாகப் தெளித்து பூ உதிர்வதை தடுக்கவும். அதிகாலை அல்லது மாலை நேரத்தில் கைத்தெளிப்பான் மூலம் ஒரு எக்டருக்கு 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.
- பருத்தியில் மழையை பயன்படுத்தி உரமிடவும். கலைகொள்ளி அடிகாதவர்கள் கை களையெடுக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். 60நாட்கள் களையில்லாதவாறு பார்த்து கொள்ளவும்.
- விவசாயிகள் விதைப்பதற்கு தேவையான இடுபொருள்கள் விதை, உரம் ஆகியவற்றை பரிந்துரைக்கப்பட்ட அளவில் தயார் நிலையில் வைத்திருக்கவும் மற்றும் மழை பெய்ய ஆரம்பித்தவும் விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 34-37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-27°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 08-14 கி.மீ வேகத்தில் வீ சக்கூடும். காற்று தெற்கு மற்றும் தென் மேற்கு திசையிலிருந்து வீ சக்கூடும்.

### வேளாண் அறிவுரை

**நெல்**

அதிக மழை காரணமாக நெல் பயிர் மூழ்குவதற்கும், புகையான் தாக்குதல் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது. முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும். விதைத்தல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பணிகளை ஒத்திவைக்கவும்.

**வாழை**

ஓரிரு இடங்களில் கன மழை எதிர்பார்க்கப்படுவதால், முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும். காய்ந்த சருகுகளை அப்புறப்படுத்தவும். 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கும் தார்விட்ட மரங்களுக்கும் முட்டுக்கால் வசதியினை ஏற்படுத்தவும்.

**பருத்தி**

அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவரி மற்றும் இரவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்திக்கு தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். உரம் வைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை தள்ளி வைக்கவும்.

**உளுந்து**

தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் புரட்டாசி பட்டத்தில் பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய உளுந்து ரகம் வம்பன் 8 மற்றும் வம்பன் 10, பச்சை பயிறு வம்பன் 3 மற்றும் 4 ஆகிய இரங்களை தேர்வு செய்து விதைக்கவும் . விதைக்கும் முன் உளுந்தில் வேர் அழுகல் நோய் வராமல் தடுக்க விதையை டிரைகோ டெர்மா விரிடி 4 கிராம் / கிலோ (அ) சூடோமோனாஸ் 10 கிராம் / கிலோ என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம்.

**தக்காளி**

தக்காளி பயிரில் இலை சுருட்டை நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியாக புதிதாக வளரும் தக்காளி செடியில் மஞ்சள் நிறத்தில் இலைகள் சுருண்டு காணப்படும். தாவரத்தின் வளர்ச்சி குறைந்துவிடும். புதிய இலைகளின் அளவு குறைந்து சுருங்கி, நரம்புகள் மஞ்சள் நிறத்தில் மாறியும் காணப்படும். இலைகள் மேல் நோக்கி சுருண்டு பார்ப்பதற்கு கிண்ணம் போல் இருக்கும். மலர்கள் தோன்றும் ஆனால் காய் பிடிப்பதற்கு முன் உதிர்ந்துவிடும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீரக்கு 40 கிராம் சூடோமோனஸ், 250 மில்லி நன்கு புளித்த தயிர், மற்றும் 2 கோழி முட்டைகளின் வெள்ளைக்கரு என்ற விகித்தில் எடுத்துக் நன்கு கலந்து தெளிக்கவும்.

**வெண்டை**

வெண்டை பயிரில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த 250 கிராம் இஞ்சி, 250 கிராம் மிளகாய், 250 கிராம் பூண்டு ஆகிய மூன்றையும் அரைத்து அதனை 70லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசலை தயாரிக்க வேண்டும். பின் 10லிட்டர் தண்ணீருக்கு 100மில்லி இஞ்சி, மிளகாய், பூண்டு கரைசல் உடன் 250மில்லி நன்கு புளித்த மோர் மற்றும் 20மில்லி முட்டையின் வெள்ளைக்கரு ஆகியவைகளை கலந்து தெளிக்க வேண்டும்.

**கொத்தவரை**

கொத்தவரைப் பயிரில் அசுவினி தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை இளம் பூச்சிகள் மற்றும் முதிர் பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சும். இதன் காரணமாக செடிகள் வாடும்இ பூக்கள் வாடி தொங்கும், செடிகளின் வளர்ச்சியும் தடைப்படும். இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 கிராம் என்ற அளவில் அசிபேட் உடன் 10 மில்லி ஒட்டுப் பசை கலந்து தெளிக்க வேண்டும்.

**மல்லிகை**

மல்லிகைப் பயிர்களில் கழுத்தழுகல் மற்றும் வேரழுகல் நோய் பரவலாக தென்படுகின்றது. இதன் தாக்குதல் தாவரங்களின் எல்லா நிலைகளிலும் காணப்படும் வாய்புள்ளது. தாக்குதலின் முதல் அறிகுறியாக முதிர்ந்த இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். பின்பு இளம் இலைகள் மஞ்சளாகும். இறுதியில் தாவரம் இறந்துவிடும். வேரில் கறுப்பு நிற மாற்றத்தை காண முடியும். இதன் தாக்குலைக் கட்டுப்படுத்த நன்கு மக்கிய தொழுஉரத்துடன் ஒரு ஏக்கருக்கு 2 கிலோ என்ற அளவில் டிரைகோடெர்மா விரிடியினை கலந்து வைக்கவும்.

**கால்நடை**

ஆடு வளர்க்கும் விவசாயிகள் ஆடுகள் மற்றும் குட்டிகளின் இறப்பை தவிர்க்க தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை பருவமழை காலத்திற்கு முன் போட்டுக் கொள்வது அவசியமாகும். இதுவரை ஆடுகளுக்கு தடுப்பூசி போடாதவர்கள் அருகிலுள்ள கால்நடை மருத்துவரை அணுகி தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசியை போட்டுக் கொள்ளவும்.

**4. மலைப்பிரதேசமண்டலம்**

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிக லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 14-18°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09-12°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 04-08 கி.மீ அளவுக்கு தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- விதை மூலம் பரவும் நோய்களை நிர்வகித்தல் விதைகளை டிரைக்கோடெர்மா அஸ்பெரெல்லம் @ 4 கிராம்/கிலோ அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் @ 10 கிராம்/கிலோ கொண்டு விதை மூலம் பரவும் நோய்க் கிருமிகளை கட்டுப்படுத்த விதை நேர்த்தி செய்யலாம். மேலும், எந்த வொரு பயிர் திட்டத்திற்கும் முன்பு மண் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.
- கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- பூண்டு-ஊட்டச்சத்து மற்றும் நோய் மேலாண்மை • பூண்டு விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக் கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இடலாம்.
- பூண்டு பயிரில் இலைப்புள்ளி / ஊதா நிற கருகல் நோய் ஏற்படுவதை நிர்வகிக்க, மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- இஞ்சி மென் அழுகல் மேலாண்மை • போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தலாம் • நோயற்ற விதை கிழங்குகளைத் தேர்ந்தெடுத்து, விதைக் கிழங்குகளுக்கு மான்கோசெப் அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 3 கிராம் /லி அல்லது 200 பிபிஎம் ஸ்ட்ரெப்டோசைக்ளின் மூலம் 30 நிமிடங்களுக்கு விதை நேர்த்தி செய்யலாம். • நோயுற்ற வயலில், பாத்திகளை காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி அல்லது போர்டாக்ஸ் கலவை @ 1%என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- காய்கறி பயிர்களை தாக்கும் நச்சுயிரி நோய்களுக்கான ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள் • நோயற்ற விதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் • ஒரே பயிரை திரும்ப திரும்ப பயிரிடக் கூடாது • நச்சுயிரி தாக்கப்பட்ட செடிகளை சேகரித்து, அழிக்க வேண்டும் • நாற்றங்கால் படுக்கைகளின் மீது நைலான்வலை (அ) வைக்கோல் கொண்டு மூட வேண்டும் • மிளகாய் போன்ற காய்கறி பயிர்களை பயிரிடும் போது, 2-3 வரிசை மக்காச்சோளம் (அ) சோளத்தை வரப்பு பயிராக பயிரிட வேண்டும் • ஒட்டுப் பொறிகளை (நீலம் & மஞ்சள், முறையே) ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வயலில் பொருத்தவும் • தேவையெனில், டைமெத்தோயேட் @ 2.0 மிலி/லிட்டர் (அ) தையாமீதக்ஸம் @ 0.2 மிலி/லிட்டர் (அ) இமிடாக்ளோப்ரிட் @ 0.2 மிலி/லிட்டர் என்ற அளவில்கைத் தெளிப்பான் கொண்டு மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- அனைத்துபயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி வழங்குதல், உரம் மற்றும் பூச்சிக் கொல்லி பயன்பாடு போன்ற உழவியல்/ பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை ஒத்திவைக்கவும்.

**5. வட மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்பட்டு 10.09.2025 முதல் 12.09.2025 வரை மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33 - 36$^{o}$செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-25$^{o}$செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-12 கி.மீ அளவுக்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- *மானாவரியில் ஆவணிப்பட்ட மக்காச்சோளம் பயிரிட்டுள்ள விவசாயிகள், கிடைக்கின்ற மழையைப் பயன்படுத்தி 20 முதல் 30 நாட்கள் வயதுடைய மக்காச்சோள பயிர்களுக்கு முதல் மேலுரம் இடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அதாவது ஒரு ஏக்கருக்கு 110 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டால் செடியின் வளர்ச்சி நன்றாக இருக்கும். மேலும், அடியுரமாக பொட்டாஷ் இடாத வயலில், ஒரு ஏக்கருக்கு 25 கிலோ என்ற அளவில் யூரியாவுடன் கலந்து மேலுரமாக கொடுக்க வேண்டும்.*
- *வாழையில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, பேரூட்டச்சத்தின் பயன்பாட்டை அதிகரிக்கவும், அதன் உற்பத்தித்திறன் 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கவும் பனானா சக்தி என்ற வாழை நுண்ணூட்டக் கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 20 கிராம் என்ற அளவில் எலுமிச்சை சாருடன் கலந்து வாழை நட்ட 3, 5 மற்றும் 7வது மாதங்களில் இலை வழி தெளிப்பு செய்ய வேண்டும். இதனால் வாழைப்பழத்தின் இனிப்புத்தன்மை அதிகரித்து, அதன் தரம் மேம்படுகிறது.*
- *தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், ஆவணிப்பட்டம் விதைப்பு செய்துள்ள பயிர்களில் வேர் அழுகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இந்த நோய் பரவாமல் தடுக்க டிரைக்கோடெர்மா விரிடி என்ற உயிர் பூஞ்சாணக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் என்ற அளவில் கலந்து செடியின் வேர்ப்பகுதியில் ஊற்ற வேண்டும். மேலும் இனிமேல் பயிர் செய்ய உள்ள விதைகளை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.*

**கால்நடை ஆலோசனைகள்**

- *சமீப நாட்களாக மழை விட்டுவிட்டு பெய்து வருவதால், ஈக்களின் இனப்பெருக்கத்திற்கு ஏற்ற தட்ப வெப்பநிலை நிலவுகிறது. அதனால் கோழிப்பண்ணைகளில் ஈக்களின் தொல்லை அதிகமாகியுள்ளது. கோழிப்பண்ணைகளில் ஈக்களின் எண்ணிக்கையை கண்காணித்து அதற்கு ஏற்ப கட்டுப்படுத்துதல் முறைகளை கையாளுவது மிகவும் சிறந்ததாகும். கோழிப்பண்ணைகளில் ஈக்களின் எண்ணிக்கையை கண்காணிக்க ஸ்பாட் கார்டை பயன்படுத்தலாம். அதாவது 5 x 3 அங்குலம் அளவில் வெள்ளை பேப்பரை ஒரு அட்டையில் குண்டூசியால் நான்கு மூலையிலும் குத்தி, பண்ணையில் ஒரு கொட்டகைக்கு 5 - 10 கார்டுகள் என்ற விகிதத்தில் 24 மணி நேரத்திற்கு வைத்து விட்டு அடுத்த நாள் அந்த கார்டுகளை சேகரித்து அதில் காணப்படும் புள்ளிகளை (ஈக்களின் எச்சில்) எண்ணினால், தோராயமான ஈக்களின் எண்ணிக்கையை கண்டு கொள்ளலாம்.*
- *பண்ணையில் ஈக்களின் (புள்ளிகளின்) எண்ணிக்கை 100 க்கு மேல் காணப்பட்டால் ஈக்கட்டுப்பாடு முறைகளை உடனடியாக மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். பண்ணைகளில் தண்ணீர் கசிவு இல்லாமல் இருக்க பழுதடைந்த நிப்பிள்களை மாற்ற வேண்டும். இறந்த கோழிகள் மற்றும் உடைந்த முட்டைகளை பண்ணையிலிருந்து உடனே அப்புறப்படுத்த வேண்டும். மேலும் தீவன சிதறல்களை தவிர்க்க வேண்டும். ஈக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் கோழிகளுக்கு மருந்து கலந்த தீவனம் கொடுக்க வேண்டும்.*

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல 29°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 08-22 கி.மீ ஆகவும் பெரும்பாலும் காற்று மேற்கு மற்றும் வட, தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரைகள்**

- நெற்பயிரில் இலைமடக்கு புழுவின் தாக்கம் தென்படுகிறது. தாக்கத்தின் அறிகுறியான இலைகள் நீளவாக்கில் மடிக்கப்பட்டிருக்கும், புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்து விடும். தீவிர தாக்குதலின் போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காயந்தது போல் காட்சியளிக்கும். இதனை கட்டுப்படுத்த பைபிரினில் 80% WG 20-25 கி / ஏக்கர் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவீதம் அல்லது வேப்பெண்ணைய் 0.03 சதவிகிதம் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து "தீய்ந்த மாதிரி" காட்சியளிக்கும். மேலும் பயிர்கள் சாய்ந்து விடும். இதைக் கட்டுப்படுத்த அதிகளவில் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். ஏக்கருக்கு பைமெட்ரோசின் 120 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் (50 மிலி / ஏக்கர் மேக்னட் / டீ பால்) கலந்து தெளிக்க வேண்டும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் இலைகளின் மேற்பரப்பில் வெள்ளை நிறக்கோடுகள் காணப்படும். நோயின் தீவிரம் அதிகமாகும் போது கோடுகள் பழுப்பு நிறமாக மாறி காய்ந்து விடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு 300 கிராம் என்ற அளவில் தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுபுழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசால்பான் 400 மி.லி / ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- நெல் வயலில் இலை சுருட்டுப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்க அறிகுறிகள் தென்படுமாயின் ஹக்டருக்கு குளோரோடேரினிலிபுருள் 150 கிராம் அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- நிலக்கடலையில் காய்களின் உருவாக்கத்தை அதிகரிக்கவும், நெற்று நிரப்பவும் விதைத்த 40-75 நாட்களில் ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் இட வேண்டும். நிலக்கடலை பயிரை முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயினை மேலாண்மை செய்ய ஒரு ஏக்கருக்கு குளோரோதலோனில் 400 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம்.

- வரும் நாட்களில் காற்றின் வேகம் 10 கிலோமீட்டருக்கு அதிகமாக வீசக்கூடும் எள்பதால் 5 மாதமுள்ள வாழை மரங்கள் சாயாமல் இருக்க முட்டு கொடுக்க வேண்டும்.
- தென்னையில் சிவப்பு கூன் வண்டின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டைத் தூளையும், மணலையும் 1:2 என்ற விகிதத்தில் கலந்து, மரம் ஒன்றிற்கு 150 கி வீதம் நடுக்குரத்தின் 3 மட்டை இடுக்குகளில் வைக்க வேண்டும். காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 ரைனோ லூர் இனக்கவர்ச்சி பொறிகளை அமைக்க வேண்டும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- கொட்டகைகளை சுத்தமாக பராமரிக்க வடிகால் வசதி செய்து தர வேண்டும்.
- குழம்பு அழுகல் நோயியை தடுக்க கால்நடைகள் தேங்கி நிற்கும் தண்ணீரில் நிற்க அனுமதிக்கப்படக்கூடாது.
- வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயிலில் உலர் வைத்த பின்பு கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சிள தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
- கால்நடைகளுக்கு அளிக்கப்படும் குடிநீரானது சுத்தமாக இருக்கு வேண்டும்.
- மழைக்காலங்களில் வரும் தொற்றுநோய்களை தடுப்பதற்காக சினையுற்ற ஆடுகளுக்கு எதிர்ப்பாற்றலை ஊக்குவிக்கும் வைட்டமின் மற்றும் தாது உப்புகளை தீனைத்துடன் கலந்து கொடுக்க வேண்டும்.
- புதிதாக பிறந்த இளம் கன்றுகளை மழையில் நனையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- காற்றின் வெப்பநிலை மற்றும் ஈரப்பதமும் உயர்ந்து காணப்படும் போது முயல்களுக்கு சுவாச அயர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் முயல் கொட்டகைகளை முறையாக பராமரிக்க வேண்டும்.
- பன்றி கொட்டகைகளில் மீத்தேன் மற்றும் அமோனியாவின் பெருக்கத்தை தடுக்க நல்ல காற்றோட்ட வசதி செய்து தர வேண்டும்.
- குஞ்சுகளுக்கு செயற்கை வெப்பம் (முதல் 2 வாரங்களுக்கு ஒவ்வொரு 200 குஞ்சுகளுக்கும் 1 வாட் / குஞ்சு அல்லது நிலக்கரி அடைகாக்கும் கருவி கொடுக்கப்பட வேண்டும்.
- கொசு மற்றும் பூச்சிகளை விரட்ட நொச்சி, வேம்பு இலைகளை கொண்டு புகை மூட்டம் போட வேண்டும்.

**7. அதிக மழை பெறும் மண்டலம்**

எதிர் வரும் 14.09.25 அன்று மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 32 - $34^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 24 - $26^0$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 80 – 90 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 50 - 60 % பதிவாக வாய்ப்புள்ளது. குாற்றின் வேகம் மணிக்கு 16 – 20 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- நெல் வயல்களில் 5 செ.மீ உயரத்திற்கு நீர் பாய்ச்ச வேண்டும். இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழித்து , நீர் மறைந்த பின் மீண்டும் நீர் பாய்ச்ச வேண்டும்.
- காற்றின் வேகம் மணிக்கு 16 - 20 கி.மீ /மணி அளவில் இருக்க வாய்ப்புள்ளதால் புதிதாக நடவு செய்யப்பட்ட தோட்டக்கலை பயிர் மரங்களுக்கு கம்புகளால் ஊன்று அளிக்கவும். நடவு செய்யப்பட்ட பழ வகை மரங்கள், மரவாசனை பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.

- தென்னையில் ரோகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதலை கட்டுப்டுத்த பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்த்து இயற்கை எதிரி பூச்சிகளை ஊக்குவிக்கவும் மற்றும் ஆமணக்கு எண்ணை தடவிய மஞ்சள் வண்ண ஒட்டுப்பொறியினை ஒரு எக்கடருக்கு 8 எண்கள் வீதம் வைக்கவும்.
- மல்லிகையில் போரேட் குருணை மருந்தினை செடி ஒன்றிற்கு 10 கிராம் என்ற அளவில் செடிகளின் வேர்பகுதியில் தூவி நீர் பாய்ச்சி வரும் போது நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- மரவள்ளியில் மாவு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மீன் அமில சோப்பை 1 லிட்டர் தண்ணீரில் 25 கிராம் வீதம் கலந்து தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க. கோவை**